


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச்செயல் ( குறள் – 067)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை
வாழ்விடமாகவும் , உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சபாபதி சுப்பிரமணியம்

அவர்களின்
அமரத்துவ வாழ்நாள்
நினைவு கூருதல் மலர்
**02.05.2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் இதய தெய்வம்
ஊனினையும் உயிரினையும் உருக்கி
எங்கள் குடும்ப விருட்சத்தினை ஆணிவேராகத்
தாங்கி நின்று நாங்கள் நற்பெயருடனும்
நற் செல்வங்களுடனும் வாழ - தன்னை
மெழுகுவர்த்தியாக உருக்கி எம்மை வாழவைத்து
இன்று - ஆறாத் துயரில் எங்களை ஆழ்த்திவிட்டு
வானுறையும் தெய்வமாகிய எங்கள் குடும்ப
இதய தெய்வத்தின் நினைவலைகளை
நெஞ்சிற் சுமந்து இம் மலரை எங்கள் தெய்வத்தின்
திருவடிகளிற்கு சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

## அன்புத்தெய்வம்

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 18 | | 02 |
| 07 | | 04 |
| 1943 | | 2019 |



அமரர்

# சபாபதி சுப்பிரமணியம்

அவர்களின் திதிவெண்பா

விளம்பி வருடம் பங்குனி பத்தொன்பதாம் நாள் அபரபட்ச துவாதசி திதியதனில் எமதாசன் ( பிதா) உயர் திரு சபாபதி சுப்பிரமணியம் அவர்கள் இவ்வுலகை விட்டு ஆதியும் அந்தமுமில்லா பெருஞ்சோதியடி சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வையகம் முற்றும் மாமழை மறைந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளத் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலி கொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப் புன் கூடுளானே.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்



ஈசனே நீயல்ல தில்லை
இங்கும் அங்கு மென்பதும்
பேசினேனொர் பேதமின்மை
பேதை யேனென் எம்பிரான்
நீசனேனை ஆண்டு கொண்ட
நின்ம லாவொர் தின்னலால்
தேசனேயொர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரவந்
துவளுமே கலையும் துகிலுமே யொருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ஆக்கில் அவரிடங் களந்தை
அணி திகழ் ஆதித்தேச் சரமே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகனங்கி
யிரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு ...... முளநோய்கள்
நேருறு புழுக்கள் கூடு நான்முக னெடுத்த வீடு
நீடிய விரத்த மூளை ...... தசைதோல்சீ
பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை ...... நரிநாய்பேய்
பாறோடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணி ...... லுழல்வேனோ
நாரணி யறத்தி னாரி ஆறுச மயத்தி பூத
நாயக ரிடத்து காமி ...... மகமாயி
நாடக நடத்தி கோல நீலவ ருணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி ...... திரிசூலி
வாரணி முலைச்சி ஞான பூரணி கலைச்சி நாக
வாணுத லளித்த வீர ...... மயிலோனே
மாடம தில்முத்து மேடை கோபுர மணத்த சோலை
வாகுள குறட்டி மேவு ...... பெருமாளே.

## வாழ்த்து

**வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**
**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில்
18
07
1943



விண்ணில்
02
04
2019

## அமரர்
# சபாபதி சுப்பிரமணியம்

## எங்கள் அன்புத் தெய்வத்தின் வாழ்க்கை வரலாறு....

இசையோடு அசைபாடும் இளந்தென்றல் கடற் காற்றை முழுவதுமாய் அனுபவித்து தன் மண்வாசம் என்றுமே சுமந்து தனது மண்வாசனையை தன் பிள்ளைகளுக்கும் உணரச் செய்யும் புண்ணிய பூமி மண்டைதீவில் 1943 ஆம் ஆண்டு ஆடி மாதம் 18 ஆம் நாள் திரு. சபாபதி சுப்பிரமணியம் அவர்கள் சபாபதி மாரிமுத்து தம்பதியினருக்கு மகனாகப் பிறந்து தனது குழந்தைப் பருவத்தை அவ்வூரிலேயே செழிப்புடன் தன் வலுவிழந்த தாய் தந்தையரின் அரவணைப்பில் வளர்ந்து பின் தனது கல்வியைத் தொடர்வதற்காக பருத்தித்துறை நெல்லியடியில் அக்கா கண்மணியின் அரவணைப்பில் உயர்கல்வி வரை நெல்லியடி மத்திய கல்லூரியில் கற்றார். பின்னர் வேலை நிமித்தம் வெளியூர்கள் பலசென்று காலங்கள் சில கடந்தாலும் விவசாயம் என்பது அவர் மூச்சும் பேச்சுமாக இருந்து கொண்டேயிருந்தது கடமையில் நேர்மையும், கண்ணியமும் தன் குடும்பத்தில் அன்பும் அரவணைப்பும் தன்னைப்போல் மற்றவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிக்கும் நெகிழ்ச்சியுமானவர் ஆனாலும் கனவு நனவாகும் காலம் கனிந்தது.

முல்லைத் தீவிலே படித்த வாலிபர் விவசாய நில காணித் திட்டத்தின் கீழ் ஒரு வாய்ப்பு எட்டி வரவே அதை நழுவவிடாமல் தன் நிரந்தர வேலையைத் துறந்து தனது கனவைப் பலமானதாகப் பற்றிக் கொண்டார். அவர் அத்தொழிலையே மூச்சாகக் கொண்டு கடின உழைப்பையும் படித்த அறிவையும் சேர்த்து 1970 - 1980 களில் பெரும் விளைச்சலை அனுபவித்தவர். அதே காலப் பகுதியில் அ வரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரின் தங்கை வேலுப்பிள்ளை நாகேஸ்வரி அவர்களை திருமணம் செய்து கொண்டார். பின்பு ஏற்பட்ட நாட்டின் அசாதாரண சூழல் மற்றும் தனது பெரும்பலமான அக்காவின் இழப்பு என்பவற்றால் உடல் நலிவுற்று பலமிழந்த நிலையிலும் மனத்தைரியத்தோடு பிள்ளைகளுக்குப் பக்க பலமாக இருந்தார். அவரின் ஒரே பலம் அவரின் மனைவி, மற்றும் பிள்ளைகள். அவரின் பலவீனமும் அதுவே விவசாய நிலங்களை கைகொடுக்காத காலங்களிலும் அவர் தன் அறிவைப் பயன்படுத்தி சில அனுபவங்களில் கணக்காளராகவும் வேலை பார்த்து தன் குடும்பத்திற்கு உறுதுணையாக இருந்தவர்.

ஊர்விட்டு ஊர்மாறி நாடுவிட்டு நாடு மாறுமளவிற்கு இன்ப துன்பங்கள், கஷ்ட நஷ்டங்கள், வசதி வாய்ப்புக்கள் வரும் என்று இவர் சற்றேனும் எதிர்பாராத நிலையிலேயே அவரது மூத்த மகளுக்கு வரனாக அவருடைய நெருங்கிய நண்பரின் மகன் அமையவே இழந்த வாழ்வு திரும்பப் பெற்ற இன்பம் தோள் கொடுப்பான் தோழன் என்பதற்கிணங்க அவர் வாழ்வின் எல்லாத் திருப்பு முனைகளும் அமைந்தது, அவர் நண்பர்களினால் என்றால் அது மிகையில்லை. 2011 ஆம் ஆண்டு மீண்டும் தனது தாய்மடி வாசம் தேடிவந்தவர் இழந்த நிலம், வீடுவாசல், சந்தோசம், மரியாதை எல்லாவற்றையும் படிப்படியாக மீளப்பொற்றுக் கொண்டார். மகிழ்ச்சியில் அசாதாரண அளவு கடந்ததாக பாசம் மனைவி மக்களில் மட்டுமல்லாமல் அவருக்கு நெருக்கமானவர்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்தது. பேரப்பிள்ளைகளின் உணர்வை தொலைபேசியில் கதைத்துணர்ந்தாலும் அதை உயிரூட்டியவர்கள் சிவாணு, கிரி ,பிரணவி மற்றும் அவரின் ஏனைய பேரப்பிள்ளைகள் இவரின் புதிய வாழ்வின் ஆத்ம நண்பர், எல்லோராலும் "சித்தப்பா" என அழைக்கப்படும் தங்கேஸ்வரன் அவர்கள் இருவரும் சேர்ந்து பலதும் பத்துமாக தமது உணர்வுகளையும் பகிர்ந்து கொண்டனர். அது மட்டுமல்லாது ஒருவருக்கொருவர் மனநிம்மதிக்கு மருந்தாக இருந்தனர் என்பதை அவர்களே உணர்ந்திராத உற்ற நண்பர்கள் ஆசைப்பட்டதை உடன் சமைக்க மகள், ஆறுதல் வார்த்தைக்கு மருமகன், ஏவலுக்கு மகன் எப்பொழுதுமே அருகிலேயே மனைவி, ஆசைவார்த்தைக்குப் பேரப்பிள்ளைகள் எனத் தனது இறுதிக் காலத்தை உணர்வுப் பூர்வமான உவகையுடனே களித்தார் என்பதனை நாங்கள் உணர்கின்றோம்.

பங்குனித் திங்கள் பொறிக்கடவை அம்மன் கோவில் வேள்வியன்று காவடி உலா வீதியில் பவனிவர தனது இரு கரங்களையும் கூப்பி " நான் நிறைவாய் இருக்கின்றேன் இனி என்னைக் கூப்பிடுங்கோ எனக் கூறி வேண்டிய மறுதினமே நிம்மதியுற்றீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். எங்கள் நம்பிக்கையின் பிரகாரமாக மீண்டும் ஒருமுறை நாம் ஒன்று கூடுவோம். என்ற நம்பிக்கையில் உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம் நாம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**தோழமையான அப்பா கிடைத்த பிள்ளைகள் யாரும்**
**"தடு" மாறியதும் இல்லை.....**
**"தடம்" மாற்றியதும் இல்லை....!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் நினைவில் நின்றவை

ஒவ்வொரு நல்ல பிள்ளைக்கும் பின்னால் நல்ல அம்மா அப்பா இருப்பார்கள். அந்த வகையில் அப்பா!!! வாழ்வில் நாங்கள் எந்த உச்சம் வரை போனாலும் நீங்கள் தான் எப்பொழுதும் எங்கள் வாழ்வின் முதல் மனிதர். எம் இதயம் கவர்ந்த முதல் மனிதரும் கூட. ஒரு நல்ல அப்பா. பிள்ளைகளின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவார். ஆனால் நீங்கள் எம் வாழ்வையே நல்ல நிலைக்கு மாற்றியமைத்தவர். நாம் என்றுமே உங்கள் நினைவு சுமந்து உங்கள் வழியிலேயே தொடர்வோம்

**என்றும் அன்புடன் உங்கள் பிள்ளைகள்**

## மருமக்கள் நினைவில் நின்றவை

எங்கள் மாமாவே, எங்களை மருமகன் போல் அன்றி தன் மகன்மார் போல் அன்பு செலுத்தி பேதமையின்றி உங்கள் பிள்ளைகள் போல் நேசித்தீர்கள். எம்மீது ஒரு கடின வார்த்தை பேசியது கூட இல்லை. நீங்கள் எப்போதும் எம் வாழ்விற்கு உறுதுணையாக இருந்தவர். நாங்கள் என்றும் உங்களை மறவோம். என்றும் உங்கள் நினைவில் வாழும்

**மருமகன்மார்.**

தமிழில் அப்பா என்ற சொல் எப்படி வந்ததென்று தெரியாது ஆனால்.... அன்பு என்ற சொல் நிச்சயம் அப்பாவில் இருந்தான் வந்திருக்கும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் நினைவில்

Thaathth, Forever you shall be in our heart, As you have Children that are your Parts. When I first met you I felt scored. But how being gone Can't be bared. All the memeries in my hard, Return to me before I go to bed. Like the time we were at the beach, With the sand being orangry peach. And the time you asked how I ate, And my brother and sister that I shouldn't hate. Although We are not together, We will reunite one day or another.

Love from Grand Children

நிம்மதி தேடிச்செல்லும் நாம் பணம் செலவு
செய்தாலும்
கிடைக்காத ஒரு நிம்மதியான இடம்
அப்பாவின் மடி மட்டும் தான் .

ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட
இருந்தாலும்
அப்பா உம்மைப்போன்று அன்பு செய்ய
யாரும் இல்லை இவ் உலகில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்துப் பிள்ளையார் அருளிய
## உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாது மொருவனு மாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
புணர்வு கலங்கி வொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்துட
பணியுலர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும மருண்டு கடமி மிதென்று
பார்வை மெய்வாய்ச் செவி கால்கை ளென்ற

உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாள மறிந்து
மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்டப வுந்தியு தைத்து கவிழ்ந்து
மடமடியில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளிநகை யூறநகை விதழ்மட வாரு
முவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப
உடைமணி யாடை யரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவில் இருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமிழின் கலையுங் கரைகண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கும் பணிக ளணிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மதன சொரூப னிவனன மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு கழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு



மனது பெறாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கிட
ஒரு முத லாகி முதுபொரு ளாய்
இருந்த தனங்களும் வம்பி லிழந்த
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையி னில் ஓர் தடியு மாகியே.
வருவது போவ தொருமுது கூனும்
மந்தியெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
துகிலு மிழந்து கணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சன மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவு மிராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்ச முலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறி நலாதர வேதெனை நொந்து

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசு மெனவரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவிழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு கவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே



வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல் யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி யுயர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால மறந்து

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்ச பறந்திட நின்றவர் பந்த ரிடுமென
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று
பலரைய மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகி றொங்கல் களப மணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவகமே செய்து நாறு முடம்பை

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிட மூடி யழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்க
ளுரகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினியாளுமே.

கட்டி யணைத்திடும் பெண் டீரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுக்கியப்பா
லெட்டியடி வைப்பாரோ விறைவா கச்சி யேகம்பனே.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை : பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுப்போவ தில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளைத் யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னம் யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென் செய்வேன் கச்சி யேகம்ப நாதனே.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவா ரில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்

பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொழியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.



திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

## கந்த சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**
**(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)**



சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர



சுவாமி மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண





பழமுதிர்ச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க






திருத்தணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்


பழனி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனாங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்



திருச்செந்தூர்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சாங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



திருப்பரங்குன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்


வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



முற்றிற்று
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விருட்சம்

சபாபதி + மாரிமுத்து
↓
◆ கண்மணி + ◆ சுந்தரலட்சுமி
↓
◆ சுப்பிரமணியம்

வேலுப்பிள்ளை + சின்னம்மா
↓
◆ குணலட்சுமி
மகேஸ்வரி
◆ பரமலிங்கம்
நாகேஸ்வரி

சுப்பிரமணியம் — நாகேஸ்வரி
↓
- தமிழ்ச்செல்வி + சாந்தரூபன் → சயன், அட்சயா, பிரணவன்
- ஜெசிதா + சுரேந்திரன்
- தமிழினியன்
- விஜிதா + இராஜகோபால் → தனுஷ்கா, அனுசன்
- பிரதீபன்

◆ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

## நன்றி நவில்கின்றோம்

நினைவுகளை இதயத்தில் சுமந்தபடி
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி
அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தந்தை
**அமரர் சபாபதி சுப்பிரமணியம்**
**அவர்களின்** அணைவுச்செய்தி கேட்டு எம்
இல்லம் தேடி ஓடிவந்து ஆறுதல் தந்த
அனைவருக்கும் தூர இடங்களிலும் துயரத்தைச்
சுமந்து தேம்பி நின்ற உறவுகளுக்கும்
தொலைபேசி மூலம் ஆறுதல்
அளித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளைப்
பிரசுரித்த அன்பர்கள், அயலவர்கள்,
நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்-

" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவம் என்பதே அறிவு

**பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்**
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
**படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்**
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
**அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்**
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
**அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்**
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
**பாசம் என்பது யாதெனக் கேட்டேன்**
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
**மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்**
மணந்து பாரென இறைவன் பணித்தான்
**வறுமை என்பது யாதெனக் கேட்டேன்**
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
**இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்**
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

**அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்**
**ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்**
**ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி**
**அனுபவம் என்பதே நான் தான் என்றார்.**

**கவிஞர்-கண்ணதாசன்**

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org